**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**
**அசல் வழக்கு எண். 98/2009**

நாள்: 04.06.2026.

பெயர்: பாலசுப்ரமணியன் (பி.வா.சா.1) த/பெ: வேலாயுதம்
சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1) வாதியின் தாத்தா அய்யாக்கண்ணுவும், எனது தந்தையின் தாத்தாவான குப்புசாமியும் சகோதரர்கள் என்றால் சரிதான். மேற்படி அய்யாக்கண்ணு மற்றும் குப்புசாமிக்கு இடையே சுமார் 117 வருடங்களுக்கு முன்னரே பாகம் பிரிந்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி பாக பிரிவினையை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் பழைய நத்தம் சர்வே எண் என்ன என்றால் 123/16, 123/17, 123/18, 123/19, 123/20, 123/21 ஆகும். தாவா சொத்தின் புதிய சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. வாதி கிரையம் வாங்கும் போது இருந்த வீடு தற்போது வரை உள்ளது என்றால் சரிதான். வாதி வீட்டின் வாரம் 1.5 அடி நீட்டிப்படி உள்ளது என்றால் ½ அடி தான் நீட்டியுள்ளது. எனது வீட்டின் மேல்புற அளவு என்ன என்றால் கீழ்மேல் காலடி 30 ஆகும், தென்வடல் அளவு என்ன என்றால் சுமார் 72 அடி ஆகும். எனது வீட்டின் பின்புறத்திற்கு தாவா சொத்து வழியாக தான் சென்று வருகிறேன் என்றால் சரிதான். வாதி முன்புறம் வீடும், பின்புறம் தோட்டமும் வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வாதி தனது தோட்டத்திற்கு அவரது வீட்டின் மேல்புறம் உள்ள வழியாக சென்று வருகிறார் என்றால் சரியல்ல, அவர் தனது வீட்டின் வழியாக தான் சென்று வருகிறார்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/வே.பாலசுப்ரமணியன்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.